பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. மேலும், இதனை வலியுறுத்தி கடந்த 13–6–2018 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் திரு. மு. திராவிடமணி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை பேரவை விதி 55–ன்கீழ் கொண்டுவந்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள், வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுணன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் எம்.பி. திரு. தளவாய் சுந்தரம் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ராஜ்ய சபை எம்.பி. திரு. விஜயகுமார் அவர்கள், விளவங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் மற்றும் கிள்ளியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் ஆகியோர் section 4(A)–ஐ அமலாக்கம் செய்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தை சட்டத்திற்குள் உட்புகுத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் விளைவுகளை ஆராய்ந்து, மிகத் தீவிரமாக அரசு ஆலோசனை செய்து 4(A) என்னும் புதிய பிரிவு உட்புகுத்தப்பட்டு வெளியிடப்பட்ட அரசு அறிவிக்கை எண் 167, நாள் 3–8–2015–ஐ, இன்று 9–7–2018 முதல் நடைமுறைப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் தனியார் காடுகள் என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களை வாங்கியவர்கள் தங்களது உரிமையை நிலைநிறுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) திருக்கோவிலூர் பேரூராட்சி, காய்கறி கடைகளுக்கு மாற்று இடம் மற்றும் வெள்ளை பிள்ளையார்கோயில், ஆற்றுப் புறம்போக்கில் வாழும் மக்களுக்கு வீடுகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சியில் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள 250 காய்கறி மற்றும் கீரை*

2018 ஜுலை 9] [முனைவர் க. பொன்முடி]

கடைகள் எல்லாம் காலி செய்யப்பட்டு அங்கே இருக்கின்ற ஏழைகள் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்வதற்கும் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், அதற்குப் பக்கத்திலேயே பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான காந்தி கல்யாண மண்டபம் இருக்கின்றது. அங்கு கடைகளை வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுத்தால், அது நிச்சயமாக அவர்களுக்கு உபயோகமாக இருக்கும். அதேபோன்று அங்குள்ள வெள்ளை பிள்ளையார்கோயிலுக்குப் பக்கத்தில் ஆற்றுப் புறம்போக்கில் 150 குடும்பத்தினர் வசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை காலி செய்யச் சொல்லி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களும் மாற்று இடம் கேட்கின்றார்கள். தயவுசெய்து இந்த அரசு அவர்களுக்கு மாற்று இடத்தைக் கொடுத்துபசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக் கொடுத்தால் அவர்கள் அனைவருக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் இன்று காலையில் 9–45 மணிக்குதான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இருங்கள், சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் நீங்கள் பதில் சொல்கின்றீர்களா? சொல்லுங்கள்.*

முற்பகல் 11–30

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருக்கோவிலூர் பேரூராட்சிப் பகுதியிலே உள்ள கடைகளை காலி செய்வது பற்றியும், புறம்போக்கு நிலத்தில் வசித்து வருகிற 150 குடும்பத்தினருக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதற்கான மாற்று இடம் இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாலைகள் விரிவாக்கப் பணிகளுக்காகவும், பாலங்கள் கட்டும் பணிகளுக்காகவும் நிலம் எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்ற சூழ்நிலை வருகின்றபோது, மாற்று ஏற்பாடாக பல இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் பல வீடுகள் கட்டப்பட்டு, அனைவருக்கும் மாற்று வீடுகள்*

கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, 150 குடும்பத்தினருக்கும் வீடுகள் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, மாவட்ட அமைச்சர் அவர்களிடம் இன்று அந்தக் கடைகள் கட்டுவது குறித்துப் பேசும்போது, அவர்களும் பக்கத்தில் இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிவிப்புகள்

(அ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்களை மென்பொருள் வடிவில் வழங்குவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 51–ன்கீழ், 1,250 உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்கள் மாற்றம் செய்யப்பட்டு, ஆறு பட்டியல்களாக உடுக்குறியிடாத வினாக்களாக எண்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய (10–வது முதல் 15–வது பட்டியல் (2018) வரை) மென்பொருள் வடிவம் (Soft copy) அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற வினாக்கள்–விடைகளின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், உறுப்பினர்கள் அளித்த வினாக்களுக்கு துறைகளிடமிருந்து பெறப்பட்ட விடைகள், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பப்படும் என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்ற இலக்கின் தொடர்ச்சியாக, 20–3–2017 முதல் 19–7–2017 வரையிலான 29 நாட்களுக்கான சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" என்ற இலக்கை எய்த வேண்டும் என்ற எண்ணத்திற்கு வித்திடும் வகையில், மாண்புமிகு சட்டமன்ற